தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 30, பவ – திருவள்ளுவர் ஆண்டு, 2026
1995, மார்ச் 14, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு"

நன்மை தீமை எனும் இரண்டின் பாகுபாடுகளை ஆராய்ந்தறிந்து இவ்வுலகத்தில் அறத்தையே மிகுதியாக மேற்கொள்ளும் சீரியோரின் பெருமையே உலகில் மிகச் சிறந்ததாக அவர்களுக்குப் பின்னும் நின்றிருக்கும்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. வி. ஆறுமுகம் அவர்கள் 13-11-1994 அன்றும், திரு. கே. பாண்டியராஜ் அவர்கள் 5-12-1994 அன்றும், திரு. முகமது ரசா கான் அவர்கள் 3-1-1995 அன்றும், திரு. என்.எம். வேலப்பன் அவர்கள் 23-1-1995 அன்றும், திரு. டி.மணவாளன் அவர்கள் 14-2-1995 அன்றும், திரு. ஆர். மணிமாறன் அவர்கள் 20-2-1995 அன்றும், திரு. வி. முத்து அவர்கள் 25-2-1995 அன்றும் மற்றும் திரு. தி.ரா. மாசிலாமணி அவர்கள் 4-3-1995 அன்றும் மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. ஆறுமுகம் அவர்கள் 1952-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை திருச்செந்தூர் தனித் தொகுதியிலிருந்து அன்றைய

ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. பாண்டியராஜ் அவர்கள் 1957-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம், உத்தமபாளையம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. முகமது ரசா கான் அவர்கள் 1946-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை சித்தூர் முகமதன் ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1953-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை சென்னை சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு.என்.எம். வேலப்பன் அவர்கள் 1957-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம், தேனி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. டி. மணவாளன் அவர்கள் 1954-ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957-ஆம் ஆண்டு வரையிலும், 1957-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1962-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய செங்கல்பட்டு மாவட்டம் குடியாத்தம் தனித் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர். மணிமாறன் அவர்கள் 1977-ஆம் ஆண்டு முதல் 1980-ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1980-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரையிலும், கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார். மேலும், அவர் 1980-ஆம் ஆண்டு முதல் 1984-ஆம் ஆண்டு வரை அரசுத் தலைமைக் கொறடாவாகவும் திறம்படச் செயலாற்றியுள்ளார்.

திரு. வி. முத்து அவர்கள் 1952-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம், பெரியகுளம் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்ன சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செம்மையாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. தி. ரா. மாசிலாமணி அவர்கள் 1989-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை அன்றைய செங்கல்பட்டு மாவட்டம் பூவிருந்தவல்லி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த அப்பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

முற்பகல் 10-05

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. ந. கணபதி, பேரவையின் முன்னாள் துணைத் தலைவர் மறைவு

(ஆ) திரு. கே.பி. கந்தசாமி, முன்னாள் அமைச்சர் மறைவு

(இ) 'முத்தமிழ்க் காவலர்' திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானங்களைப் பேரவைமுன் வைக்கின்றேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், பேரவை முன்னாள் துணைத் தலைவருமான திரு. ந. கணபதி அவர்கள் 13-12-1994 அன்று மறைவுற்ற செய்தி குறித்து இப்பேரவை மிகவும் வருந்துகிறது.

திரு. ந. கணபதி அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டுவரை தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலிருந்தும், 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை சென்னை, மைலாப்பூர் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார். மேலும், அவர், 1974 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் துணைத் தலைவராகச் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளார்.